DEPOSITION OF THE WITNESS
(Chapter XXIII Code of Criminal procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT NO.II,
RAMANATHAPURAM
**STC.No. 1185/2022**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Deposition of the | : | PW1 | Caste | : | |
| Name | : | பழனி | Age | : | 29 |
| F/N | : | நாகநாதன் | Occupation | | புரோட்டா மாஸ்டர் |
| Village | : | ஆண்டிதேவன் வலசை | | | |
| District | : | இராமநாதபுரம் | | | |

Solemnly affirmed in accordance with the provision of Act X 1873 on the 05-th day of September 2022.

**05.09.2022.**

**முதல் விசாரணை:**

நான் இராமநாதபுரம் ஆண்டிதேவன் வலசையில் குடியிருந்து கொண்டு புரோட்டா மாஸ்டராக வேலை பார்த்து வருகிறேன். வழக்கின் எதிரி வேலுநாச்சியாரை தெரியும். அவர் எனது அக்காவின் மாமியார் ஆவார். (**எதிரி ஆஜராகவில்லை கு.வி.மு.ச பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது**). 11.11.2019 ம் தேதி என்மனங்கொண்டான் குரூப் சர்வே எண். 52/3A-2A ல் 4.50 சென்ட் இடம் வாங்கினேன். அதில் 2 மாமரம், 2 சப்போட்டா, 2 முருங்கை, 1 வேப்பமரம் வளர்த்தேன். 29.08.2021 ம் தேதி மதியம் 12.00 மணிக்கு போய் பார்த்தபோது சப்போட்டா மரத்தையும், முருங்கை மரத்தையும் எதிரி வேலுநாச்சியார் வெட்டிக் கொண்டிருந்தார். அதை நான் அவரிடம் கேட்டபோது என்னை தேவிடியா மகனே உன்னால முடிஞ்சத பார்த்துக்க நான் வெட்டதான் செய்வேன் என்று சொன்னார். அப்போது எனது அக்கா மற்றும் நல்லதம்பி மகன் நல்லசேகர் வந்து சத்தம் போட்டவுடன் அவர் சென்றுவிட்டார். அதன் பிறகு நான் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேன். அந்த புகாரில் உள்ள கையெழுத்து என்னுடையது. அதை நான் தான் எழுதி காவல் நிலையத்தில் கொடுத்தேன். (**புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை** – இல்லை

**ஒப்பம்/-க. பிரபாகரன்**
**நீதித்துறை நடுவர் எண். II**
**இராமநாதபுரம்**

DEPOSITION OF THE WITNESS
(Chapter XXIII Code of Criminal procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT NO.II,
RAMANATHAPURAM
**STC.No. 1185/2022**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Deposition of the | : | PW2 | Caste | : | |
| Name | : | கலாராணி | Age | : | 31 |
| W/o | : | நல்லசேகர் | Occupation | | இல்லதரசி |
| Village | : | ஆண்டிதேவன் வலசை | | | |
| District | : | இராமநாதபுரம் | | | |

Solemnly affirmed in accordance with the provision of Act X 1873 on the 05-th day of September 2022.

**05.09.2022.**

**முதல் விசாரணை:**

நான் இராமநாதபுரம் ஆண்டிதேவன் வலசையில் இல்லதரசியாக குடியிருந்து வருகிறேன். வழக்கின் எதிரி வேலுநாச்சியாரை தெரியும். அவர் எனது அக்காவின் மாமியார் ஆவார். (**எதிரி ஆஜராகவில்லை கு.வி.மு.ச பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது**). அ.சா.1 எனது உடன்பிறந்த சகோதரர் ஆவார். 29.08.2021 ம் தேதி நானும், எனது தம்பியும் துத்திவலசை, என்மனங்கொண்டானில் உள்ள எங்களது தோட்டத்தை பார்க்க சென்றோம். தோட்டத்தில் இருந்த சப்போட்டா மரத்தையும், முருங்கை மரத்தையும் எதிரி வேலுநாச்சியார் வெட்டிக் கொண்டிருந்தார். அதை அ.சா.1 கேட்டபோது அவரை தேவிடியா மகனே உன்னால முடிஞ்சத பார்த்துக்க நான் வெட்டதான் செய்வேன் என்று சொன்னார். அப்போது நானும் மற்றும் நல்லதம்பி மகன் நல்லசேகர் வந்து சத்தம் போட்டவுடன் அவர் சென்றுவிட்டார். அதன் பிறகு அ.சா.1 காவல் நிலையம் சென்று புகார் அளித்தார். போலீசார் வழக்கு பதிவு செய்து என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை** – இல்லை

**ஒப்பம்/–க. பிரபாகரன்**
**நீதித்துறை நடுவர் எண். II**
**இராமநாதபுரம்**